செய்தி வெளியீடு எண்: 456 நாள்: 21.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது**

**தமிழகம் 100% நோயற்ற மாநிலமாக திகழ தனியார் அமைப்புகள், தொண்டு நிறுவனத்தினர் முழு ஒத்துழைப்பு வழங்க மாநிலஅளவில் நடைபெற்ற விழிப்புணர்வு கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் வேண்டுகோள்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், தலைமையில் தனியார் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், இந்திய மருத்துவச் சங்கம், இந்திய வர்த்தக சபை, தனியார் ஓட்டல் உரிமையாளர்கள், தனியார் மருத்துவமனை, விடுதிகள், பள்ளிகள், கல்லூரிகள் சங்க பிரதிநிதிகள், தனியார் மருத்துவர்கள், செவிலியர் சங்க பிரதிநிதிகள், இந்திய தொழில் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், மருந்துக் கடை உரிமையாளர்கள் ஆகியோருடன் டெங்கு மற்றும் இதர தொற்றுநோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வு கூட்டம் இன்று 21.09.2016 சென்னை ஓமந்தூரார் வளாகத்தில் உள்ள அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

- எல்லா காய்ச்சலும் டெங்கு காய்ச்சல் அல்ல. டெங்கு காய்ச்சல் என்பதும் ஒரு வகையான வைரஸ் காய்ச்சலே. டெங்கு காய்ச்சல் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகி பகல் பொழுதில் கடிக்கும் “ஏடிஸ்” வகை கொசுவினால் பரவுகிறது.
- ஏற்கனவே, பொதுமக்கள் தங்கள் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகள், பூந்தொட்டிகள், அழகு ஜாடிகள், சிறு பாத்திரங்கள், தகர டப்பாக்கள், பயன்படாத டயர்கள், தேங்காய்ச் சிரட்டைகள், ஆட்டு உரல் போன்றவற்றில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவும் தண்ணீர் சேமிக்கும் தொட்டிகளைச் கொசுக்கள் புகாமல் நன்கு மூடி வைக்கவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது
- கட்டுமானத் தொழில் செய்வோர் புதிதாகக் கட்டப்படும் கட்டிடங்களில் மின்தூக்கி (lift) குழிகள் மற்றும் நீர் சேமிக்கும் தொட்டிகளில் தேங்கும் நீரினை அகற்றி அப்பகுதிகளை அடிக்கடி சுத்தம் செய்து நீர்தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- அதே போன்று திருமண மண்டபங்கள், ஓட்டல்கள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் ஆகியவற்றில் தண்ணீர் சேமிக்கும் தொட்டிகளை வாரம் ஒருமுறை பிளீச்சிங் பவுடர் கொண்டு நன்றாகத் தேய்த்து கழுவி கொசு புகாதாவாறு மூடிவைக்க வேண்டும். ஏடிஸ் கொசு உருவாகும் தேவையற்ற பொருட்களை அகற்ற வேண்டும்.
- மேலும், தேநீர் மற்றும் காபி அருந்திய பிறகு தூக்கி வீசப்படும் சிறு சிறு அட்டை கப்புகளில் தேங்கும் சிறிதளவு நீரில்கூட ஏடிஸ் கொசு உற்பத்தியாகும் வாய்ப்புகள் மிக மிக அதிகம். எனவே, இத்தகைய கப்புகளில் தண்ணீர் தேங்கி கொசு பரவாமால் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- அனைத்து மாவட்டங்களிலும் களப்பணியாளர்களுக்கும், மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும், தனியார் மருத்துவர்களுக்கும் தொடர் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.
- சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவத் துறை பேராசிரியர்களால் தனியார் துறை மருத்துவர்களுக்கு டெங்கு காய்ச்சல் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் நவீன சிகிச்சை முறைகள், டெங்கு காய்ச்சலை குணப்படுத்துதலில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சவாள்கள், சிக்கலான நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல், டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சையளிப்பதில் ஏற்படும் அனுபவங்கள் மற்றும் treatment protocol குறித்தும் விரிவாக விவாதிக்கப்படுகிறது.
- இந்திய மருத்துவ சங்க மருத்துவர்கள் காய்ச்சல் கண்ட நோயாளிகள் கொண்ட விவரத்தினை அருகாமையில் உள்ள வட்டார ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மற்றும் நகர்நல அலுவலரிடமும் தெரிவிக்க வேண்டும். மேலும் 24 மணி நேரமும் செயல்படும் **104** தகவல் உதவி மையத்துடனோ அல்லது கட்டுப்பாட்டு மையத்தின் தொலைபேசி எண்களையோ **(044–24350496/044–24334811 / 9444340496/93614 82899)** தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும்.
- எனவே, வர்த்கர்கள் சங்கம் மற்றும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகள் தங்கள் உறுப்பு நிறுவனங்களிடம் ஏடிஸ் கொசு ஒழிப்பு பணியின் அவசியத்தை வலியுறுத்தி கொசு அழிப்பு மற்றும் ஒழிப்பு பணிகளை திறம்பட மேற்கொள்ளவும், விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதுபோன்ற பன்முக நடவடிக்கைகள் (Multi Dimensional Activities) மூலம் தமிழ்நாட்டில் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் பரவுவது முழு கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பணிகளை மக்கள் இயக்கமாகவே மாற்ற அறிவுறுத்தப்பட்டது. டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க அரசு அனைத்து தடுப்பு நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது. **தமிழகம் 100% நோயற்ற மாநிலமாக திகழ தனியார் அமைப்புகள், தொண்டு நிறுவனத்தினர், பொது மக்கள் ஆகியோர் முழு ஒத்துழைப்பு வழங்க** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**